செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்

# த.வே. உமாமகேசுவரனார்



O31w M83
P08
228615

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்

# த.வே. உமாமகேசுவரனார்

## வாழ்வும் பணிகளும்

நடுவண் அரசு தமிழவேள் அவர்களின்
தமிழ்த் தொண்டினைப் பாராட்டி 18.02.2006-ல்
சென்னையில் நிகழ்த்திய, அஞ்சல் தலை வெளியீட்டு
விழாவின் போது வழங்கப்பெற்ற அன்பளிப்பு

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கரந்தை, தஞ்சாவூர்.

# முன்னுரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மூவேந்தர்களுக்குப் பின்னர் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் மதுரையில் 1901-ஆம் ஆண்டு நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பெற்றது. அதற்குப் பத்தாண்டுகளுக்குப் பின்னர் 1911-ஆம் ஆண்டு சங்கம் நிறுவிய த.வே. இராதா கிருட்டினப்பிள்ளையும் அவரின் நண்பர்களும் சேர்ந்து கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். த.வே. இராதாகிருட்டினப்பிள்ளை அரசுப்பணியில் பணியாற்றியதால் சங்கத்தின் தலைவர் பதவியைத் தன் தமையனார். த.வே. உமாமகேசுவரம்பிள்ளை பி.ஏ., பி.எல்.. அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் வட்டக்கழகத்தலைவராய் இருந்து பொதுமக்களுக்கும் தமிழுக்கும் - கல்விக்கும் ஆற்றிய பணிகள் மிகப் பல. தஞ்சைவட்டத்தில் 50 தொடக்கப்பள்ளிகள் இருந்தநிலையை 150 பள்ளிகளாக உயர்த்திய பெருமைக்குரியவர். "நீராரும் கடலுடுத்த" என்று தொடங்கும் மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த் தெய்வ வணக்கப்பாடலைச் சங்க விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடச் செய்ததோடு, அப்பாடலைத் துண்டுக் காகிதங்களில் அச்சிட்டு அனைவரும் பின்பற்றுமாறு செய்தவர் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்களேயாவார்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்" - என்ற பாரதியாரின் வாக்கிற்கேற்ப 1916-ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஒரு தொடக்கப்பள்ளியைத் தோற்றுவித்து ஏட்டுக்கல்வியும் தொழிற்கல்வியும் தந்ததோடு மட்டுமல்லாமல் திக்கற்ற மாணவர்க்கு உண்டுறை விடுதியையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்களேயாவார்.

"இழந்த பழம் புகழ்மீள வேண்டும் நாட்டில் எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்" - என்ற பாவேந்தரின் பாடலுக்கேற்ப சங்கத்தில் திங்கள்தோறும் தமிழ் அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவுகள் நடத்தித் தமிழர்கள் எழுச்சியும் விழிப்புணர்வும் மொழிப்பற்றும் பெறச் செய்தவர் தமிழவேள் அவர்களேயாவார்.

1919ஆம் ஆண்டிலேயே "தமிழ்- ஓர் உயர்தனிச் செம்மொழி" என்பதனை ஏற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு ஓர் இருக்கைதரல் வேண்டும் எனத் தமிழ் நாட்டில் முதன்முதல் தீர்மானங்கள் நிறைவேற்றியவர் உமாமகேசுவரனார் அவர்களேயாவார். 1924-ஆம் ஆண்டிலேயே "தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும்" எனத் தமிழ்நாட்டில் முதன்முதல் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியவரும் உமாமகேசுவரனார் அவர்களேயாவார்.

1919-ல் நிறைவேற்றப்பட்ட செம்மொழித் தீர்மானத்தைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் மீண்டும் 2003-ல் நிறைவேற்றியதோடு நில்லாமல் தமிழாசிரியர் கழகம் - தமிழியக்கம் ஆகியவற்றோடு இணைந்து தஞ்சையில் மிகப்பெரிய பேரணி நடத்தி - மாநில அளவில் சங்கத்தில் முதன்முதல் மாநாடு நடத்தி - பின்னரும் தமிழ்நாடு முழுவதும் சென்று ஒரு கோடிக் கையெழுத்து இயக்கம் நடத்தி மத்திய அரசுக்கு அனுப்பியதும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தான். இவற்றோடு நில்லாமல் சங்கத்தார் - தமிழாசிரியர்கள் - தமிழியக்கத்தார் ஆகிய இருநூறு பேரை அழைத்துக் கொண்டு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து தமிழைச் செம்மொழியாக்கவும் - தமிழவேள் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிடவும் தாங்கள் துணைபுரிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து வந்தோம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் அங்கத்தினராகிய செம்மொழிக் காவலர் மாண்புமிகு. டாக்டர் கலைஞர் அவர்கள் பரிந்துரைசெய்து வெற்றியைத் தந்துள்ளார்கள். அவருக்கு எங்கள் நன்றி என்றும் உரியது. செந்தமிழ்ப் புரவலர் - தமிழவேள் - த.வே. உமாமகேசுவரனாரின் திருவுருவ அஞ்சல்தலையை வெளியிட்டுக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பெருமை சேர்த்துள்ள மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மாண்புமிகு. தயாநிதிமாறன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கரந்தை,<br>14.02.2006

ச. இராமநாதன்,<br>செயலாளர்<br>கரந்தைத் தமிழ்ச் சங்கம்

## செந்தமிழ்ப் புரவலர்
# தமிழவேள் உமாமகேசுவரனார்
## (1883 – 1941)

**பிறந்த ஊர் :**

கரந்தை என்று இன்று எல்லோராலும் அழைக்கப்படும் (தஞ்சையைச் சார்ந்த) கருந்திட்டைக்குடி, செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் உமாமகேசுவரனார் பிறந்த ஊராகும்.

**பெற்றோர் :**

தந்தையார் பெயர் திரு. வேம்பப்பிள்ளை; தாயார் பெயர் திருமதி. காமாட்சியம்மையார்.

**பிறந்த நாள்:**

சுபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 26–ஆம் நாள் (7.5.1883).

**கல்வி:**

தந்தையார் வேம்பப்பிள்ளை வல்லத்தில் வேலை பார்த்தபொழுது உமாமகேசுவரனார் அங்கிருந்த தொடக்கப் பள்ளியில் கல்வி பயின்றார். பின் தந்தையார் கும்பகோணத்துக்கு மாற்றம் பெற்றதும் அங்குத் தம் தொடக்கக் கல்வியைத் தொடர்ந்தார். அரசால் நடத்தப்படும் எட்டாம் வகுப்புத் தேர்வில் (ஈ.எஸ்.எல்.சி. தேர்வில்) நிறைந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றார். பின் தஞ்சையில் உள்ள தூயபேதுரு கல்லூரியில் நான்காம் படிவத்தில் சேர்ந்தார். புத்தகப் புழு என்று பிறர் சொல்லுமாறு இடைவிடாது முயன்று படித்து அக்கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற பின் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிலகாலம் எழுத்தராக வேலை பார்த்தார். நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் மிக்க உமாமகேசுவரனாருக்கும், மாவட்டத் துணை ஆட்சியாளருக்கும் சிறு உட் பூசல் ஏற்பட்டது. தம் உள்ளப்பாங்கிற்கு ஏலாத அவ்வேலையை விட்டு நீங்கினார். தஞ்சையில் மிகச் சிறந்த வழக்குரைஞராக விளங்கிய திருவாளர் கே. சீனிவாசப்பிள்ளை (தமிழ் வரலாறு எழுதியவர்) என்பவரைப் போலவே தாமும் வழக்குரைஞராக வேண்டும் என

விரும்பினார். எனவே, சட்டத் தேர்வு பயின்று தேர்ச்சி பெற்றுப் பி. எல். பட்டம் பெற்றார். பட்டம் பெற்றதும் வழக்குரைஞர் சீனிவாசம்பிள்ளை யவர்களிடமே பணிபழகும் இளம் வழக்குரைஞராகச் சேர்ந்தார். பின்னர் தாமே தனித்துத் தொழில் புரியத் தொடங்கினார். தமக்கு முறையானது என்று தெரிந்த வழக்குகளை மட்டுமே ஏற்றுக்கொண்டு நடத்தினார். வழக்குகளைக் கூர்ந்து நோக்கி, நுட்பங்களைக் கண்டுணர்ந்து திறம்பட நடத்தி முடிக்கும் பேராற்றலால் வழக்குரைஞர் தொழிலில் இவருக்குப் பேரும் புகழும் கிடைத்தன.

**குடும்ப வாழ்க்கை :**

திருச்சியில் வாழ்ந்த அரங்கசாமிப் பிள்ளை என்பவரின் மகளாகிய உலகநாயகிக்கும், உமாமகேசுவரனாருக்கும் திருமணம் நடைபெற்றது, பஞ்சாபகேசன், மாணிக்கவாசகன், சிங்காரவேலு என்னும் மூன்று ஆண் மக்கள் பிறந்தனர். சிங்காரவேலு பிறந்த நான்காவது திங்களில் உலகநாயகியார் இவ்வுலகிலிருந்து மறைந்தார். இளமையிலேயே மனைவியை இழந்த உமாமகேசுவரனாரை மறுமணம் செய்துகொள்ளுமாறு உறவினர் வற்புறுத்தினர். "நான் மறுமுறை இன்னொரு வீட்டிற்கு மருமகனாகச் செல்ல என் மனம் நாணமடைகிறது. ஒருத்திக்கு ஒருவனாயின், ஒருவனுக்கும் ஒருத்தியே" என்று சொல்லி மறுத்துவிட்டார். காலக் கொடுமையால் முதல் இரண்டு மக்களும் இறந்துவிட்டனர். இளம் வயதிலேயே பெற்றோரையும், வாழ்க்கைத் துணைவியையும், ஈன்றெடுத்த மக்கள் இருவரையும் இழந்து, சொல்லொணாத் துயருற்ற உமாமகேசுவரனார் தம்மைப் பொதுத் தொண்டிற்கே உரிமையாக்கிக் கொண்டு விட்டார்.

**பொது வாழ்க்கை:**

1977 ஆம் ஆண்டில் தோன்றிய நீதிக் கட்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கினார். தஞ்சை மாவட்டக் கழக உறுப்பினராயும் தஞ்சை வட்டக் கழகத் தலைவராயும் இருந்த உமாமகேசுவரனார் தம் பொறுப்பிலிருந்த எல்லா ஊர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்தார். சிற்றூர்கள் அனைத்திற்கும் சாலைகள் போடப்பட்டன. அவற்றுள் முக்கியமானது வரகூர்- ஐம்பது மேலகரம் பெருஞ்சாலையாகும்.

தஞ்சைக்கு அண்மையிலுள்ள திருவையாற்றை மையமாகக் கொண்டு நடக்கும் ஏழூர்த் திருவிழாவில் கலந்துகொள்ளும் அன்பர்கள் சரியான சாலைகளின்றித் தொல்லையுற்றனர். இதனைக் கருத்தில் கொண்டு அவ்வேழூரையும் இணைக்கும் முக்கிய சாலைகளைப் போட ஏற்பாடுகள் செய்தார். துப்புரவுக்கும், விளக்குகள் அமைக்கவும், பாலங்கள் கட்டவும், ஏற்பாடு செய்து ஊர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் குறைவின்றிச் செய்தார். 1920ஆம் ஆண்டின் சென்னை மாநிலத் தொடக்கக் கல்விச் சட்டத்தை நன்கு பயன்படுத்தி நாற்பது, ஐம்பது பள்ளிகளே இருந்த தஞ்சை வட்டத்தில் நூற்று எழுபது (170) பள்ளிகளை ஏற்படுத்திப் பெரும் சாதனை புரிந்தார். பள்ளிக் கட்டடங்கள் பலவற்றைப் புதிதாகக் கட்டினார். பள்ளிகளுக்குச் சில கட்டடங்களை விலைகொடுத்து வாங்கினார். தொடக்கப் பள்ளிகள் பல உயர்தொடக்கப் பள்ளிகளாயின. மாணவர் விடுதிகளில் வசதி குறைந்த எல்லா இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் தங்கிப் பயில வழிவகை செய்தார்.

தஞ்சை மன்னர் சரபோசி அறநிலையத்தின் சார்பில் திருவையாற்றில் சமஸ்கிருதக் கல்லூரி ஒன்று மட்டுமே நடந்து வந்தது. இலவச உணவு விடுதியுடன் கூடிய அக்கல்லூரியில் ஓரினத்தைச் சார்ந்த மாணவர்கள் மட்டுமே பயனடைந்து வந்தனர். தமிழ் மண்ணில் தமிழ் மண்வளங்கொண்டு நடக்கும் கல்லூரியில் தமிழுக்கு, இடமில்லாத நிலைமை இருந்து வந்தது, உமாமகேசுவரனாரின் முயற்சியால் அந்நிறுவனத்தில் தமிழ்க் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது. அரசர் கல்லூரி என்றழைக்கப்படும் அக்கல்லூரி இதுவரை பல்லாயிரக்கணக்கான புலவர் பெருமக்களை உருவாக்கித் தந்துள்ளது. இராமச்சந்திர மேத்தா சத்திரம், சிரேசுசத்திரம் ஆகியவற்றில் ஆதிதிராவிட மாணவர்கள் உட்பட அனைத்து வகுப்பினரும் தங்கி இலவச உணவு உண்டு படிக்க ஏற்பாடு செய்தார். தஞ்சை மாவட்டக் கழகம், தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் கல்விக் கழகம், தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் கல்விக் கழகம், தஞ்சை மாவட்ட உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கழகம், முதலிய அமைப்புகளின் வாயிலாகவும் தனிப்பட்ட முறையிலும், தமிழ் மாணவர்கள் கல்வியில் ஓங்கிச் சிறக்கத் தேவையான அனைத்தையும் செய்தார்.

### கரந்தைத் தமிழ்ச் சங்கத் தோற்றம்:

இலக்கணக் கடல் என எல்லோராலும் போற்றப்படும் அரசஞ்சண்முகனார் தம் தொல்காப்பியப் பாயிரவிருத்தி என்னும் நூலை அச்சிடுவதற்குத் தஞ்சை வந்திருந்தார். அப்போது அவருடைய தூண்டுதலினாலும், புலவர் சாமிநாதபிள்ளை போன்றவர்களின் முயற்சியினாலும், கரந்தை பஞ்சநதபாவா மடத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அச்சங்கத்திற்கு 'வித்தியா நிகேதன்' என்று பெயர் சூட்டப்பட்டது. தமிழ், வடமொழி, ஆங்கில நூல்களின் ஆராய்ச்சியையே பொழுதுபோக்காகக் கொண்டவரும், பெருவள்ளலுமாகிய அரித்துவார மங்கலம் கோபாலசாமி இரகுநாத இராசாளியார், அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசஞ்சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இராதா கிருட்டினப்பிள்ளை, நீ. கந்தசாமிப் பிள்ளை, தட்சிணாமூர்த்திப் பிள்ளை, கவியரசு வேங்கடாசலம் பிள்ளை முதலியோர் சங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். தமிழ்த்தாத்தா உ.வே.சா., மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத் தேவர் முதலியோர் உறுதுணையும் இதற்கு இருந்தது. சங்கத் தலைவர் இராசாளியார் கண்டிப்பானவர். செயலாளர் சாமிநாதபிள்ளை இளைஞர்களிடத்துத் தம் ஆணையைக் கண்டிப்புடன் செலுத்தியதால் இளைஞர் சிலரின் மனம் வெதும்பியது, உமாமகேசுவரனாரின் தம்பியாகிய இராதாகிருட்டினப்பிள்ளை அவர்கள் தலைமையில் அவ்விளைஞர் குழு கூடியது. நாமே தனியாக ஒரு தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தால் என்ன? என்ற எண்ணம் இவ்விளைஞர் குழுவில் ஆராயப்பட்டது. இதன் பயனாய்ப் புதியதொரு சங்கம் தோன்றியது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பின்பற்றி இச்சங்கத்துக்கு, கரந்தைத்தமிழ்ச் சங்கம் என்று பெயர் சூட்டப்பெற்றது. விரோதிகிருது ஆண்டு வைகாசித் திங்கள் முதல் நாள் (14.5.1911) அன்று நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமிப் பெருந்தகையார் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இந்நாள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் ஒரு பொன்னாளாம்.

### சங்கத் தலைவர் உமாமகேசுவரனார்:

கரந்தைத் தமிழ்ச் சங்கச்செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் சங்கத்திற்குத் தலைமை தாங்கத்

தகுதியுள்ளவர் ஒருவர் பற்றி அறிஞர் ஆராய்ந்தனர். ஆங்கிலத்துடன் அருந்தமிழையும் அமைவுறக்கற்று நேர்மைக்கும், உண்மைக்கும் போராடும் பெருஞ்செயல் வீரர் உமாமகேசுவரனாரே சங்கத் தலைவர் பொறுப்பிற்கு உரியவர் என அறிஞர் பலரும் ஒருமித்து முடிவு செய்தனர். அறிஞர் தம் விருப்பத்துக்கிணங்கக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பை உமாமகேசுவரனார் ஏற்றுக்கொண்டார்.

**சங்கமும் - உமாமகேசுவரனாரும்:**

சங்கம் நிறுவிய துங்கனாகிய இராதாகிருட்டினப்பிள்ளை சங்கத்தைத் தோற்றுவித்த ஏழாம் ஆண்டில் காலமாகிவிட்டார். சங்கம் தோன்றிய நாளிலிருந்து உமாமகேசுவரனார் தாம் இறக்கும் காலம் வரையிலும் சங்கத் தலைவராக இருந்து தமிழ்ப் பணி ஆற்றினார். சங்கத்தின் வாழ்வும், உமாமகேசுவரனார் வாழ்வும் பிரிக்க முடியாது இணைந்தே நின்றன.

**சங்கத்தின் வழி உமாமகேசுவரனார் ஆற்றிய தொண்டுகள்:**

சங்கம் பதிவு செய்யப்படாவிட்டால் அது சரியாக இயங்கமுடியாது என்பதைக் கருத்திற்கொண்ட தலைவர் உமாமகேசுவரனார் 1860ஆம் ஆண்டின் 21ஆவது சட்டப்படி ஆனந்த ஆண்டு சித்திரைத் திங்கள் பத்தாம் நாள் (1.5.1914இல்) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பதிவு செய்தார். பதிவு செய்யப்பெற்ற பின் தலைவர் உமாமகேசுவரனார் சங்கத்தின் வாயிலாக ஆற்றிய அரும் தமிழ்ப் பணிகள் பல, அவற்றுள் இன்றியமையாத சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

**எங்கும் தமிழ், எதிலும் தமிழ்:**

“தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை” என்னும் அவலநிலையை நீக்கவேண்டும் என்று கரந்தைத் தமிழ்ச் சங்கம் கங்கணம் கட்டியது. தமிழ்நாடு முழுதும் குடத்துள் விளக்காயிருந்த புலவர் பெருமக்களையெல்லாம் அழைத்து வந்து சொற்பொழிவாற்றச் செய்து, தமிழ் உலகத்திற்கு அறிமுகப்படுத்தியது. தமிழ்நாட்டுப் பெரும் புலவர்கள் அனைவரும் அடிக்கடி ஒன்றுகூட வழிசெய்தது. தமிழில் பேசுவது குறைவு என்றும், வடமொழி கலந்துபேசுவதும் ஆங்கிலத்தில் பேசுவதும் பெருமை

என்றும் நினைத்துக்கொண்டு தமிழைத் தமிழர்களே புறக்கணித்த காலத்தில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஒரு பெரும் புரட்சியையே உண்டாக்கியது. கலப்பற்ற தூய தமிழ் உணர்ச்சி பெருக்கெடுக்கத் தூண்டுகோல் செய்தது. தமிழறிஞரானோரும் வடசொற்களைக் கலந்து பேசும் நிலையை மாற்றி, தனித்தமிழ் நடையைத் தோற்றுவித்தனர். 'கரந்தை நடை' என்ற ஒரு தனித்தமிழ் நடையையே உருவாக்கிவிட்டது சங்கம், இவ்வெழுச்சி மிக்க: பணியால் விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகைகள் மறைந்து, திருமண அழைப்பு வந்தது. ஸ்ரீ, மகாரா.... ஸ்ரீ போய் திரு, திருவாளர் ஆகிய சொற்கள் வழக்கிற்கு வந்தன. பிரசங்கம், சொற்பொழிவு ஆயிற்று, அக்கிரா சனாதிபதி தலைவர் ஆனார். காரியதரிசி செயலாளர் ஆனார், பொக்கிஷதாரர் பொருளாளர் ஆனார். இது போன்ற எண்ணற்ற அழகுதமிழ்ச் சொற்கள், உமா மகேசுவரனாரின் சீரிய தமிழ்ச் சங்கப் பணியால் வழக்கில் நடமாடத்தொடங்கின. தமிழிலக்கியங்களை உரையாசிரியர்கள் சொன்னபடியே ஏற்றுக் கொள்ளாமல், அவற்றை ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்கும் திறன் வளர்ந்தது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இன்று அனைவரும் காண விழையும் தமிழ் வளர்ச்சி தழைக்க கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக உமாமகேசுவரனார் அரும்பாடுபட்டார்.

**நூல் நிலையம்:**

தமிழ்ச் சங்க உறுப்பினர்களும், பிறரும் பயன்படுத்துவதற்கென்று பரிதாபி ஆண்டு ஆனித் திங்கள் 31ஆம் நாள் (1912-இல்) நூலகம் ஒன்று தொடங்கப் பெற்றது. நூல் நிலையம் வளர அன்பர்கள் பலர் உதவினர். உமாமகேசுவரனார் அவர்கள் புதிய நூல்களை விலைக்கு வாங்கிப் படித்துவிட்டுத் தம் சிறிய தந்தையார் சுப்பராய பிள்ளையின் பெயரால் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்து விடுவார். கானாடுகாத்தான் வள்ளல் வெத்தாச்சி செட்டியார் அவர்கள் தம்மிடமிருந்த ஆயிரக்கணக்கான ஆங்கில நூல்களையும், தமிழ் நூல்களையும் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். அத்துடன் 2000 கலம் நெல்லை விற்று நன்கொடையும் அளித்தார். எனவே, அவருக்கு நன்றி காட்டும் வகையில் தமிழ்ச் சங்க நூலகத்துக்குப் வெத்தாச்சி புகழ் நிலையம் என்று பெயர் சூட்டப் பெற்றது. இருபது நூல்களுடன் தொடங்கப் பெற்ற

இந்நூலகம் இன்று பல்லாயிரக்கணக்கான நூல்களுடன் பயனளித்து வருகிறது. நூலகத்தோடு படிப்பகம் ஒன்றையும் சங்கம் கி.பி. 1915 முதல் நடத்தி வருகிறது.

**செந்தமிழ்க் கைத்தொழில் கல்லூரி:**

சங்கத்தின் சார்பில் 6.10.1916இல் இக்கல்லூரி தொடங்கப்பட்டது. ஏட்டுக் கல்வி மட்டுமே தொடக்கத்தில் கற்றுக் கொடுக்கப்பட்டது. நாற்பது மாணவர்கள் பயின்றனர். இது படிப்படியே வளர்ந்து எட்டு வகுப்புகள் உள்ள உமாமகேசுவர நடுத்தரப் பள்ளியாகவும், உமாமகேசுவரனார் உயர்நிலைப்பள்ளியாகவும் வளர்ச்சிபெற்றது. ஏட்டுக் கல்வியுடன் பஞ்சு நூற்றல், பாய் நெய்தல் முதலானவையும் கற்றுக் கொடுக்கப்பட்டன. 1930-31இல் இக்கல்லூரியில் பயின்ற மாணவர் தொகை 450 ஆகும். மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வாங்கப்படவில்லை.

**மாணவரில்லமும், மருத்துவ மனையும்:**

சங்கத்தின் சார்பில் திக்கற்ற மாணவரில்லம் ஒன்று தொடங்கப்பட்டது. ஏழை மாணவர்களும், பெற்றோரை இழந்த மாணவர்களும். இலவச உணவு, உடை, உறையுள் பெற்று நன்கு பயின்றனர். அது இன்றைக்கும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1928-29இல் மருத்துவமனை ஒன்று தொடங்கப் பெற்றது. மாணவர்கட்கு மட்டுமின்றி பொது மக்களுக்கும் கூட இலவசமாகப் பல ஆண்டுகள் மருத்துவ சிகிச்சை அளிக்கப் பெற்றது. கட்டணம் இல்லாமல் மருந்துகளும் அளிக்கப்பட்டன.

**தமிழ்ப்பொழில்:**

தமிழ் மொழிப்பற்று, தமிழர் பண்பாடு, தனித்தமிழ் வளர்ச்சி, தமிழர் நலன் முதலிய சீரிய நோக்கங்களை நிறைவேற்றத் திங்களிதழ் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் உமாமகேசுவரனார் உள்ளத்தில் முகிழ்த்தது. இவ்வெண்ணத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஐவர் குழு ஒன்றினை உமாமகேசுவரனார் அமைத்தார். இதன் பயனாக 1925-26இல் தமிழ்ப் பொழில் என்னும் திங்களிதழ் தொடங்கப் பெற்றது. அரிய தமிழாராய்ச்சிக் கட்டுரைகள்,

ஆங்கில மொழி பெயர்ப்புக் கட்டுரைகள், கவிதைகள், தமிழ்க்கலைச் சொல்லாக்கம், வரலாற்றுக் கட்டுரைகள், மறுப்புக் கட்டுரைகள், தமிழ்மொழி-இன உணர்வூட்டும் பகுதிகளைத் தாங்கி வெளிவரும் இவ்விதழ், இன்றும் அறிஞர்களின் கரங்களில் நின்று நிலவி வருகிறது. படைப்புகளை அளிப்போர்க்கு எவ்வித அன்பளிப்புங்கூட இல்லாமல் படைப்பாளர் தம் ஆதரவோடு ஒரு தனித் தமிழிதழ் ஏறக்குறைய 80 ஆண்டுகளாக வீறுநடையிட்டு வருகிறது. இதற்கு உமாமகேசுவரனாரின் உயர்ந்த உள்ளமும், ஓயா உழைப்புமே காரணம் எனலாம்.

**நூல் வெளியீடு :**

சங்க வாயிலாகத் தமிழவேள் செய்த செயல்களுள் நூல் வெளியிட்டமையும் ஓர் இன்றியமையாப் பணியாகும். தொடக்க காலத்தில் சங்க அறிக்கைகள், துண்டு வெளியீடுகள், தமிழ்த் தெய்வ வணக்கப் பாடல்கள் போன்றவற்றை அச்சிட்டு அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கினார். பின்னர் அரிய தமிழ் நூல்களைப் படிப்படியாக வெளியிடலானார். நாவலர் ந.மு.வேங்கடசாமி அவர்கள் எழுதிய நக்கீரர் என்னும் நூலும், விபுலானந்தரின் யாழ்நூலும், தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையும், நெல்லை வருக்கக்கோவை, சித்தரந்தாதி, சுருதிவீணை, தமிழரசி குறவஞ்சி, பரதசாத்திரம், கவியரசு நினைவு மலர், சிவமும் செந்தமிழும், கச்சிக் கலம்பகம், புலவராற்றுப்படை, காக்கைவிடுதூது முதலிய சிறந்த தமிழ் நூல்களும் வெளிவரலாயின.

**இடம் வாங்கியமை:**

சங்கத்திற்கெனத் தனி இடம் இல்லாமை கருதிப் பெரிதும் வருந்திய உமாமகேசுவரனார் இடம் பெறுவதற்கான முயற்சியிலீடுபட்டார். வள்ளல் பெத்தாச்சி செட்டியார் போன்றோர் உதவியுடன் ஒருநிலப் பரப்பினை 1923-24இல் வாங்கி முடித்தார். சங்கத்துக்கெனப்பெருநிதிச் சீட்டு ஒன்றை ஏற்பாடு செய்து அதன் வாயிலாக 1929-30இல் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தைக் கட்டி முடித்தார். 1932-33இல் மேலும் இடம் வாங்கி விளையாட்டிடங்களும், தோட்டமும் அமைத்தார்.

**கல்லூரித் தோற்றம்:**

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றித் தன் வெற்றிப் பாதையில் 25ஆவது ஆண்டு எல்லையை எட்டிப்பிடித்தது. வெள்ளிவிழாவினைத் தமிழகம் போற்றும் வகையில் கொண்டாடினார் உமாமகேசுவரனார். தமிழ்ப் புலவர்களைத் தோற்றுவித்தற்கெனத் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றினை நிறுவ வேண்டும் என்னும் பேரவாக் கொண்டு உரைத்த உமாமகேசுவரனாரின் எண்ணம் இவ்வெள்ளி விழாவில் நிறைவேறியது. 16.4.1938இல் அருள்திரு ஞானியாரடிகள் தலைமையில் கரந்தைப் புலவர் கல்லூரி தோற்றுவிக்கப் பெற்றது. கல்லூரியைத் தொடர்ந்து நடத்தப் போதிய உதவி செய்யுமாறு பொது மக்களிடம் வேண்டியும், சென்னைப் பல்கலைக் கழகத்திடம் நிலைமையை விளக்கியும், தம் அயரா முயற்சியால் 1943ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் சென்னைப் பல்கலைக் கழகம் இக்கல்லூரியை ஏற்றுக்கொண்டு தனித் தமிழ் வித்துவான் தேர்வைப் பயிற்றுவதற்கு அளித்த ஒப்புதலைப் பெற்றார்.

**சிறப்புப் பட்டங்கள்:**

அருள்திரு ஞானியாரடிகள் கி.பி.1933ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் என்னுமிடத்தில் தம் மணிவிழா நடந்தபோது உமாமகேசுவரனாரை வரவழைத்து அவரது செந்தமிழ் காக்கும் பணியைப் பாராட்டும் வகையில் 'செந்தமிழ்ப் புரவலர்' என்னும் பட்டம் அளித்தார். 1938ஆம் ஆண்டு நடந்த கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில் தமிழறிஞர்கள் ஒன்றுபட்டு "தமிழவேள்" என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர். அரசினரும் தமிழவேள் நாட்டுக்குச் செய்த தொண்டுகளைப் போற்றும் வகையில் "இராவ்சாகிப்" என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தனர்.

தமிழவேளவர்களின் ஆளுமையையும் நேர்மையையும் பண்பாட்டினையும் தமிழ்த் தொண்டினையும் பெரிதும் போற்றி மகிழ்ந்த அண்ணாமலையரசர் அவர்கள் தமிழவேள் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராகஇருக்க வேண்டிக் கொண்டமையோடு தமிழ்ச்சங்கத்திற்கு நிலை உறுப்பினர் பதவி ஒன்றையும் அளித்து மகிழ்ந்தார்.

**பண்பு நலன்கள்:**

தமிழவேள் அவர்கள் எல்லோரிடமும் மனம் திறந்து அன்புடன் பழகும் நெறியினர். ஆழமான சைவப் பற்று மிக்கவர். எனினும் பிற சமயங்கள்பாலும் பெரு விருப்பினர். தம் கடமையையே கண்ணாய்க் கொண்டவர். மாறுபட்ட கருத்து கொண்டவர்களையும் மதித்துப் போற்றுபவர். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவர். பொதுத் தொண்டாற்றுவதையே தம் பொழுதுபோக்காய்க் கொண்டவர். தமிழையும் தமிழர் நலனையுமே உயிர் மூச்சாய்க் கொண்டு உழைத்தவர்.

**தமிழ்வேள் மறைவும், தமிழ் பல்கலைக்கழகமும்:**

தமிழர் பண்பாடு, கலை, நாகரிகம், தமிழ்மொழியின் சிறப்பு ஆகியவற்றை ஆராய்ந்து தமிழ் வளர்ப்பதையே பணியாகக் கொண்ட ஒரு மாபெரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சை அல்லது திருச்சியில் தொடங்க வேண்டுமென்று தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்கள் 1925ஆம் ஆண்டிலேயே பெரும் முயற்சி மேற்கொண்டார்கள். தாம் தோற்றுவித்த கரந்தைப் புலவர் கல்லூரியை வளர்த்துத் தமிழ்ப் பல்பலைக்கழகம் ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, வடநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களையும், அவை தாய்மொழியைப் போற்றும் வகையையும் கண்டறிந்து வரவிரும்பி வடநாட்டுச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார்கள். அவ்வாறே பற்பல இடங்களையும் பார்த்தறிந்தார்கள். இச்சமயத்தில் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. தமிழவேள் குரேசி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றும் சிகிச்சை பயனில்லாது போயிற்று. 1941 ஆம் ஆண்டு மே திங்கள் 9ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் தழிவேள் அவர்கள் இயற்கை எய்தினார்கள். செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் உமாமகேசுவரனார் தமிழுக்காவே தம் வாழ்வை ஒப்படைத்தவர்களாவர். அவர் காண விரும்பிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாடு அரசு அவர் விரும்பியவாறு அதனையும் தஞ்சையிலேயே அமைத்துத் தமிழ்ப் பணி ஆற்றி வருகிறது. இப்பணி தமிழவேள் அவர்களுக்குத் தமிழ்ச் சமுதாயம் காட்டும் நன்றிக் கடனாகவும் அமைந்துள்ளது.

## செம்மொழி வெற்றி வரலாறு

முதல், இடை, கடைச் சங்கங்களுக்குப் பின் 1901ஆம் ஆண்டில் தோன்றிய நான்காம் தமிழ்ச் சங்கம் மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். அதனைத்தொடர்ந்து தொண்டு,தமிழ், முன்னேற்றம் என்பதனையேத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு 1911 ஆம்ஆண்டில் தோன்றிய ஐந்தாம் தமிழ்ச் சங்கம், "கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும்." தோன்றிய நாள் தொடங்கி, இன்று வரை, தொய்வின்றித் தளராத் தமிழ்ப் பணியாற்றிவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கமானது 1919ஆம்ஆண்டில், செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் அவர்களின் தலைமையில் தொன்மையும், சீர்மையும் வாய்ந்து விளங்குகின்ற தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாய் அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி இரு தீர்மானங்கள் நிறைவேற்றி, ஆட்சியருக்கு அனுப்பியுள்ளது.

இதே கருத்தினை வலியுறுத்திக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில், கடந்த 20.07.03-ல் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மாபெரும் பேரணியொன்றும் நடத்தப் பெற்றது. இப்பேரணியில், தமிழறிஞர்களும், தமிழ்ச் சான்றோர்களும் கலந்து கொண்டனர். கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியைகள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் என சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியின் நிறைவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றும் அளிக்கப்பெற்றது.

தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில், கரந்தைத் தமிழ்ச் சங்கம் பேரணி நடத்திய அதே நாளில் 18.08.03ல் தில்லியில் நடைபெற்ற பட்டினிப் போராட்டத்தைத் தொடர்ந்து, தமிழ்ச் செம்மெழி அறப்போராட்டக்குழு என்ற அமைப்பு தொடங்கப்பெற்று தஞ்சாவூரில் 06.08.03 அன்று பட்டினிப் போராட்டம் நடத்தப் பெற்றது. மேலும் இந்நூற்றாண்டுகால கோரிக்கையினை உலகோர் அறியும் வகையிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் உயர்தனிச் செம்மொழி கோரிக்கை மாநாடு ஒன்றினை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பெற்றது. இக்கோரிக்கை மாநாட்டினைத் தமிழாசிரியர் கழகம், தமிழியக்கம் முதலிய அமைப்புகளின் துணையுடன்

...மிழ்நாடு ஆவணக் காப்பகம்
M83
8615

கடந்த 21.12.03 அன்று கரந்தைத் தமிழ்ச் சங்கம் சீருடனும் சிறப்புடனும், சங்க வளாகத்தில் நடத்தியது. இம்மாநாட்டில் தமிழ்ச் சான்றோர்களும், துறவியரும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர்.

உயர்தனிச் செம்மொழி மாநாட்டினை நடத்தியதோடு, தம் கடமை முடிந்து விடவில்லை என்று எண்ணிய சங்கச் செயலாளர் திரு.ச.இராமநாதன் அவர்கள், தொடர்ந்து செய்திட வேண்டிய பணிகள் குறித்து ஆராய, கடந்த 10.01.04 அன்று தமிழறிஞர்கள் மட்டுமின்றிப் பாமரர்களும் அறிய வேண்டும், அவர்களும், நமது கோரிக்கைக்கு ஆதரவு நல்கிட வேண்டும். எனவே நாம் தமிழ்நாட்டுத் தமிழர்களில் ஒரு கோடி பேரிடம் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து கையொப்பம் பெற்று நடுவணரசை வற்புறுத்த வேண்டும் என்று கூறினார். அனைவரும் செயலரின் கருத்தினை ஏற்றுக் கொண்டனர்.

ஒரு கோடிக் கையெழுத்து இயக்கத்தின் தொடக்க விழா, கடந்த 12.01.04 திங்களன்று நண்பகல் 12.00 மணியளவில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றது.

தொடக்கவிழாவினைத் தொடர்ந்து ஒரு கோடிப் பேரிடம் கையெழுத்து வாங்கும் பணி தொய்வின்றி நடைபெற்றது. தமிழகத் தமிழாசிரியர் கழகத் தமிழாசிரியர்கள் மூலம், கையொப்பப் படிவமானது தமிழகமெங்கும் விநியோகிக்கப்பெற்றது, கையொப்பம் பெறும் பணி முழுவீச்சில் நடைபெற்றது.

தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி பேராசிரியர்களும், உமாமகேசுவர மேனிலைப் பள்ளி ஆசிரியர்களும், மாணவ, மாணவியரின் துணையோடு, கையொப்பம் பெறும் பணியில் ஈடுபட்டனர். தமிழகத்தில் நடக்கும் திருவிழாக்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் போன்றவற்றில் கட்சி பேதமின்றி கையெழுத்து வாங்கும் பணியில் மாணவ, மாணவியர் ஈடுபட்டனர். கும்பகோணம் நகரில் நடைபெற்ற மகாமகப் பெருவிழாவிலும், கல்லூரி மற்றும் மேனிலைப் பள்ளியினைச் சார்ந்த 400 க்கும் மேற்பட்டோர் கையொப்பம் பெறும்

பணியில் ஈடுபட்டு, நாளிதழ்கள், தொலைக்காட்சிள் ஆகிவற்றின் கவனத்தைக் கவர்ந்தனர்.

மிகக்குறுகிய காலத்திலேயே இலக்கினை அடைந்து சாதனைப் படைத்தது.

இந்நிலையில் திருமதி. சோனியா காந்தியின் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் ஒன்றுகூடி, மத்திய அரசினால் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்த அளவு செயல்திட்டங்களுள் தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கும் திட்டத்தையும் சேர்த்துள்ளனர். அதனைத்தலைமை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன்சிங் தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவையும் ஒப்புக்கொண்டது.

மத்திய அரசின் குறைந்த அளவு செயல்திட்டங்களுள், தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கும் திட்டத்தையும், சேர்த்திட அயராது பாடுபட்டு, வெற்றி கண்ட முத்தமிழ் அறிஞர் - டாக்டர் - கலைஞர் அவர்களுக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் தமிழ்ச் செம்மொழி இயக்கத்தின் சார்பிலும் நன்றி தெரிவிப்பது என்று தீர்மானிக்கப் பெற்றது.

கடந்த 09.06.04 புதன்கிழமை காலை 11.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள, கலைஞர் அரங்கில், இந்நன்றியறிவிப்பு விழா நடைபெற்றது. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞருடன், கழகப் பொருளாளர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருநா. கலியமூர்த்தி அவர்கள், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார். தொடர்ந்து பொன்னாடை அணிவித்த சங்கச்செயலர் திரு.ச. இராமநாதன் அவர்கள், தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டி, சங்கம் செய்திட்ட பணிகளை

விவரித்தார். மேலும் நடுவணரசின் குறைந்த அளவு செயல்திட்டத்தில், தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கும் திட்டத்தினை இணைத்த முத்தமிழ் அறிஞர், டாக்டர், கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார்.

ஓய்வு பெற்ற முதுகலைத் தமிழாசிரியரும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினருமான புலவர். மீ. இராமதாசு அவர்கள்முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களை வாழ்த்தி வாழ்த்துப் பா பாடினார். பின்னர் வாழ்த்துப்பா அடங்கிய வாழ்த்து மடலினை திரு. நா.கலியமூர்த்தி அவர்களும், செயலாளர் திரு.ச.இராமநாதன் அவர்களும் கலைஞரிடம் வழங்கி மகிழ்ந்தனர்.

இந்நிலையில் தமிழ் மொழியினைச் செம்மொழியாக நடுவண் அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பு தமிழர் செவிகளில் தேனாறு வந்து பாய்ந்தது போல் உள்ளது. தமிழர்களின் ஒரு நூற்றாண்டு காலகனவு இன்று நனவாகி விட்டது.

தாய்மொழி தமிழுக்காக அரியபணிகளை மேற்கொண்டு வாழ்ந்துமறைந்த தமிழவேள் உமாமகேசுவரனாரின் தொண்டினைப்பாராட்டி அவருக்கு 18.2.2006 அன்று சென்னையில் அஞ்சல்தலை வெளியிடும் நடுவணரசிற்கும், அதற்கு உறுதுணையாயிருந்து வெளியிடக் காரணமாக விளங்கிய தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் மாண்புமிகு தயாநிதிமாறன் அவர்களுக்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

"தங்கு புகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"

*******

## தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆண்டுகள் தோறும் நிறைவேற்றிய மொழிபற்றிய முடிபுகள்.

**5ஆம் ஆண்டு:**

சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழைப் புறக்கணித்துச் செய்த ஏற்பாடுகளையும் அரசியலாரால் வெளியிடப்படும் அகராதிகளின் தவறுகளையும் நாட்டுமொழிப் பட்டத்தேர்வு விதிகளிலுள்ள குறைகளையும் நன்காராய்ந்து தக்க ஏற்பாடுகள் வகுக்க அன்னாரை வேண்டியது.

தமிழ் கட்டாயப்பாடமாக இருக்கவேண்டியதில்லையென சென்னைப் பல்கலைக்கழகத்தாரும் அவரையொட்டி ஆங்கிலப் பண்டிதர் சிலரும் செய்த தடைகளை மறுத்துத் தமிழைக் கட்டாயப் பாடமாகச் செய்தல் இன்றியமையாதென்பதனைப் பல்கலைக்கழகத்தாருக்குத் தெரிவித்தது.

திருவனந்தபுரம் T. பொன்னம்பலம்பிள்ளைM.R.A.S., அவர்களைக்கொண்டு தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்த பரோடா நாட்டிறைவர்க்குத் தமிழகத்தார் நன்றியைச் செலுத்தியது.

“மெட்ரிகுலேஷன்” முதலிய தேர்வுகட்கேற்படுத்திய தமிழ்ப் பாட புத்தகங்கள் தக்காரால் பிழையறப் பதிப்பிக்கப்பெற வேண்டுமெனப் பல்கலைக்கழகத்தாரைக் கேட்டுக்கொண்டது.

**6-ஆம் ஆண்டு:**

சென்னை அரசியலார் கல்லூரியில், தமிழ்மொழிக்காக ஓர் ஆசிரியர் இடம் நிலைபெறச் செய்யவேண்டுமென அரசியாலருக்குத் தெரிவித்தது.

நடுத்தரத் (Intermediate) தேர்வுக்குத் தமிழ் வியாசமெழுது முறையில் பிறமொழி யெழுத்தொலிகளைத் தமிழிலியைத்தலும் புணர்ச்சி விதிகளை நெகிழவிடுதலும் வேண்டுமென ஆலோசனைக் கழகத்தார் செய்த முடிவுகள் இயற்கைக்கு மாறானவை என்பதனைப் பல்கலைக்கழகப் பதிவதிகாரிக்குத் தெரிவித்துக் கொண்டது.

**7-ஆம் அண்டு:**

தஞ்சை மன்னரால் அறத்திற்கென்றளிக்கப்பட்ட பொருளைத் தமிழிளைஞர்களின் கல்விப்பயிற்சிக்கு உதவவும் தவவும், திருவையாற்று வடமொழிக் கல்லூரியில் தமிழையும் முதன்மைப் பாடமாகவைத்து நடத்தவும் சில்லா இறைத்தண்டத்தலைவர் (Collector)க்கும் நாட்டாண்மைக் கழகத்தாருக்கும் தெரிவித்துக் கொண்டது.

தமிழ்மொழிவளர்ச்சியைக் கருத்துட்கொண்டு தமிழ்ச் சங்கங்களுக்குப் பொருளுதவி செய்தலாகிய தம் கடமையிலீடுபடும்படி தமிழ்நாட்டு மடங்களின் தலைவர்களை வேண்டிக்கொண்டது.

**8-ஆம் ஆண்டு:**

தமிழ்மொழி வளர்ச்சி குறித்துத் தமிழ் மேம்பாட்டில் குறிக்கொண்ட சங்கங்கள், புலவர்களின் பொதுப்பெருங்கழகம் எனுமிவற்றைக் கூட்டவேண்டுமெனச் சங்கங்களையும் புலவர்களையும் வேண்டியது.

திருச்சிராப்பள்ளியில் கல்விக்கழகத் தமிழ்ப்பண்டிதர் கூட்டம் கூடியதற்கு மகிழ்ந்து அத்தகைய கூட்டம் ஆண்டு தோறும் யாண்டும் கூடவேண்டுமென வேண்டியது.

சென்னைப் பல்கலைக்கழகத்தார் தாம் இதுகாறும் கொண்டிருந்த கொள்கையைமாற்றித் ‘தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழியே’ என்பதை ஒப்புக்கொண்டு அதற்கு முறைப்படி முதலிடமும் உரிமைகளும் வழங்கவேண்டுமென வற்புறுத்தியது.

தமிழ்மொழிவளர்ச்சி குறித்துத் தொண்டாற்றிவரும் திரு.பா. வே. மாணிக்கநாயக்கர் பி.இ.எம்.சி.ஐ., அவர்களைச் சென்னைப் பல்கலைக்கழகத்துணைவருள் ஒருவராக்க வேண்டுமென்று அதன் தலைவரையும் ஆட்சியாளரையும் வேண்டியது.

**10-ஆம் ஆண்டு:**

அரசியலாரும், இருப்புப்பாதைக்காரரும் தமிழ்ச் சொற்களைத் தவறாக எழுதிவருதலை விடுத்து, தமிழ்ப்புலவர்களையாவது எங்களையாவது கேட்டுத் திருத்தியெழுதும்படி வேண்டியது.

கல்லூரிகளிலும், உயர்தரப்பள்ளிக்கூடங்களிலும் மற்றைய கணக்காயர்களுக்கொப்பத் தமிழ்க் கணக்காயர்களுக்கும் தக்கபடி ஊதியமுறை ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குத் தீயினால் நேர்ந்த இடையூறுக்குக் கவன்று, அதற்குத் தத்தம்மாலியன்ற உதவிபுரியத் தமிழரனைவரையும் கேட்டுக்கொண்டது.

மொழிபெயர்ப்புக்காக வேண்டிய தமிழ்ச் சொற்களைத் தேடவும் ஆக்கவுந்தக்க தமிழறிஞர்கள் கூடிய ஒரு கழகம் கூட்டும்படிக்குத் தமிழ்ச் சங்கங்களையும் தமிழறிஞர்களையும் கேட்டுக்கொண்டது.

**11-ஆம் ஆண்டு**

தமிழ்மொழிக்கென ஒருதனிப் பல்கலைக்கழகம் (University) இன்றியமையாததென்று துணிந்து இம்முயற்சியிலீடுபட வேண்டுமெனத் தமிழரனைவரையும் கேட்டுக்கொள்வதுடன் இதனைச் செய்விக்கவேண்டுமென்று சென்னை அரசியலாரையும் வேண்டிக்கொண்டது.

மடங்களிலும் இல்லங்களிலும் அரண்மனைகளிலும் உள்ள வெளிவராத தமிழ் நூல்களுக்கு ஓர் அட்டவணை குறித்தனுப்பும்படி அவற்றை வைத்திருப்போர்களை வேண்டுவதோடு அவற்றை வெளியிடும்படி மடங்களின் தலைவர்களையும் கேட்டுக் கொண்டது.

இச்சங்கத்தைச் சார்ந்த செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரியை விரிவாக நடத்துதற்கும் தமிழ்ப்பொழில் என்னுந் திங்களிதழை வெளியிடுவதற்கும் தக்கவாறு பொருளுதவி செய்யத் தமிழரனைவரையும் கேட்டுக்கொண்டது.

**12-ஆம் ஆண்டு**

தொல்காப்பியத்திற் சொல்லிய எல்லாவெழுத் தொலிகளின் தமிழிலக்கணத்தையும் உலகமறிய விளக்கிப்பரப்பிவரும் திரு. பா. வே. மாணிக்கநாயக்கரவர்களைப் பாராட்டி அவர்களதாராய்ச்சிக்கு ஆட்சியாளரும் சங்கங்களும் மடங்களும் தமிழ் மக்களும் துணைசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

வித்துவான் வகுப்பிற் பயிலும் மாணவர் துணைமொழி ஒன்றின்றித் தமிழ்மொழியைத் தனிப்பாடமாகப் பயிலுதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

சென்னைப்பல்கலைக்கழகத்தார் எம்.ஏ. பட்டத்திற்குத் தமிழ்மொழியைத் தனிப்பாடமாக வைத்துக் கல்லூரிகளில் அம்மொழியை எம்.ஏ., பட்டத்தை முன்னிட்டுக் கற்பித்தற்கு ஒரு சட்டமுண்டாக்குமாறு வேண்டிக்கொண்டது.

தமிழ்வளர்ச்சி கருதித் தமிழ்ப்புலமைமிக்க திரு. பா. வே. மாணிக்கநாயக்கரவர்களைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக ஆக்கவேண்டுமென்று சென்னைப்பல்கலைக்கழகத்தாரை மீண்டும் கேட்டுக்கொண்டது.

சென்னைமாகாணக் கல்வியமைச்சர், பல்கலைக்கழகத் திருத்தத்தைச் சட்டமாக்கிய தற்காகவும், தமிழ்நாட்டிற்கெனத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டுமென வற்புறுத்தியதற்காகவும் நன்றி செலுத்துவதோடு, திருச்சிராப்பள்ளியில் ஒரு பல்கலைக்கழகம் விரைவில் தோற்றுவிக்கும்படியும் வேண்டியது.

சென்னைப் பல்கலைக் கழக வுறுப்பினர் தமிழை ஆதரிக்க வேண்டுமெனவும், தேர்ந்தனுப்பும் தென்னிந்தியமொழியாளர் தத்தம் மொழிக்கு உழைக்கவேண்டுமெனவும், தமிழுக்கென ஒரு போராசிரியர் இடம் தரப்படவேண்டுமெனவும், மக்களெல்லாரும் தமிழ்போன்ற பேச்சு வழக்குள்ள மொழிகளுக்குழைப்பவரையே தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

பள்ளிக்கூடம், கல்லூரிகள் இவற்றின் பாடச்சுவடிகள் வழுவுடையவனவாய்த் தமிழுக்குப் பெருங்கேடு விளைப்பனவாயிருத்தலின், பாடக்கழகவுறுப்பினர் தமிழ்ச்சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராதல் வேண்டுமென ஆட்சியாளரையும் பல்கலைக் கழகத்தாரையும் கேட்டுக்கொண்டது.

## 13-ஆம் ஆண்டு

ஐ. சி. எஸ். பட்டத்திற்கு உயர்தனிச்செம்மொழியாய தமிழை ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொண்டது.

விசுவபாரதியின் ஆட்சியாளர் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொண்டு தற்காலத்து நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் தமிழ் நூலைப்பரப்பவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டது.

சென்னை ஆட்சியாளர் இயல்மொழி அறிவுநூற் சொல்லாக் கக்கழகம் நிறுவிய நோக்கத்தினைப்பாராட்டி தமிழறிஞர் பா.வே. மணிக்கநாயக்கரவர்களை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென வேண்டிக்கொண்டது.

## 15-ஆம் ஆண்டு

தமிழ்மொழிக்கென ஒரு தனிப்பல்கலைக்கழகம் நிறுவுதற்பொருட்டு, திவான்பகதூர் சிவஞானம் பிள்ளை பி.ஏ., அவர்களும் மற்றைப்பெரியோரும் செய்யும் நன்முயற்சிக்குத் தமிழரனைவரும் உதவிசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

சென்னைப்பல்கலைக்கழகத்தில் நம் தமிழ்மொழி முதலிடம் பெறாவாறும் கட்டாயபாடமாகப் பயிற்றப்படாவாறும் ஆங்காங்கே செய்துவரும் சூழ்ச்சிகளில் தமிழன்பர்கள் சிக்காது தமிழாக்கத்திற்கு ஆவனசெய்யுமாறு வேண்டியது.

வித்துவான் பிரவேச நுழைவுத் தேர்விற்கு வியாசத்தோடு வித்துவான் வகுப்பிற்கேற்ற படித்தரமான தக்கபாடங்கள் சேர்க்கப்பெறவேண்டுமென்று பாடக்கழகத்தாரைக் கேட்டுக்கொண்டது.

16.6.1920ல் இதன் ஆதரவிற்கூடிய பொதுமக்களின் கூட்டம், சென்னைப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்குழுவினர் காட்டும் மொழிப் பயிற்சியின் பொருட்டுச் செய்துள்ள சிபார்சுகள் மிகவும் பிற்போக்கானவையென்பதாகவும், அம்மொழி வளர்ச்சியை வேரறுக்கத்தக்கனவென்பதாகவும் கண்டித்தது (பொழில், துணர்ரு, பக்.86)

**16-ஆம் ஆண்டு**

திருப்பனந்தாள், உயர்திரு மடாதிபதிகள், சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் வித்துவான் தேர்வில் முதலில் தேறுவார்க்கு ஆயிரரூபா பரிசளித்தருள்வதைப் பாராட்டி நன்றி கூறியது.

அதுபோலவே அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திற்கும் ஒரு பரிசளித்தருள அவர்களை வணக்கத்துடன் வேண்டிக்கொண்டது.

சென்னைப்பல்கலைக் கழகத்தார் தமிழில் (B.A. Hon's) ஏற்படுத்தவும் B.Sc., வகுப்புக்கட்டாயப் பாடமாக ஏற்படுத்தவும் வேண்டுமென அவர்களைக்கேட்டுக்கொண்டது.

தமிழில் தனிச்சிறப்புப்புலமையிருந்தாலன்றி ஆங்கிலப் பட்டதாரிகளைக் கல்லூரிகளில் தமிழாசிரியராக அமர்த்தலாகா தெனப் பல்கலைக்கழகத்தாரையும் அரசியலாரையும் கல்லூரித் தலைவரையும் வேண்டியது.

பழக்கக்கல்லூரிகளிலும் நடுத்தரக் கல்லூரிகளிலும் தமிழைத் தமிழ்ப்பண்டிதர் வாயிலாகவே கற்பிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

தமிழ் வித்துவான் வகுப்புப் பாடங்களில் வேண்டுமளவு ஆங்கிலத்தையும் படிப்பித்து, அன்னார்க்கு உயர்தர, நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழே யன்றித் தம்மாலியலும் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் உரிமையையும், ஆங்கிலப் பட்டதாரிகளை யொக்கும் எல்லா உரிமைகளையும் அளிக்கவேண்டுமென அரசியலாரையும் பல்கலைக்கழகத்தாரையும் கேட்டுக்கொண்டது.

**22-ஆம் ஆண்டு**

பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பரப்புதல் வேண்டுமென, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களையும் மடங்களையும் வேண்டியது.

தமிழ் பி.ஏ., ஆனர்ஸ் பட்டம் வழங்க ஏற்பாடு செய்யும்படி சென்னைப் பல்கலைக்கழத்தாரையும் அதற்கேற்ற வகுப்புக்களைத் தம் கல்லூரிகளிலேற்படுத்த அரசியலாரையும் வேண்டியது.

தமிழ் வித்துவான் படிப்பிற்கொதுக்கப்பட்டிருக்கும் தொகையினைஅதற்காகவே பயன்படுத்துவதோடு வடமொழிச் சிரோமணி படிப்பிற்கென ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சுவதனையும் வித்துவான் படிப்பிற்கே செலவிடவேண்டு மெனவும் தமிழ் "**ஆனர்ஸ்**" மாணவர் அனைவர்க்கும் உதவிச்சம்பளம் கொடுக்கவேண்டுமெனவும் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தாரை வேண்டியது.

வடமொழிச் சிரோமணி வகுப்புகளுக்கொப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம் சோதிடம் முதலியபிரிவுகளை ஏற்படுத்தவேண்டுமெனச் சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார்களை வேண்டியது.

கருநாடக சங்கீதத்தைப் போலவே தேவாரம் திருவாய்மொழி முதலிய தமிழ்ப்பண்முறைகளையும் கற்பிக்குமாறு விதிக்கவேண்டுமெனப் பல்கலைக்கழகங்களின் தலைவர்களைக் கேட்டுக்கொண்டது.

இராமேச்சுவரம் தேவதானத்தார் தம் கல்லூரியில் பல்கலைக்கழகத் தனித்தமிழ் வித்வான் வகுப்பினை நடத்தும்படி அவர்களை வேண்டியது.

பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தனித்தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி நடத்தவேண்டுமென, தமிழ் நாட்டுத் தனியரசாக விளங்கும் புதுக்கோட்டை அரசினரை வேண்டியது.

சைவ வைணவத்திருக்கோயில்களில் வரும் வருமானத்தின் ஒரு பகுதியைத் தமிழ் வளர்ச்சிக்கும் சமயபோதனைக்கும் பயன்படுத்தும்படி அறநிலையத் தலைவர்களை வேண்டியது.

தமிழ்ப்பாடபுத்தகக் கழகத்தார் தக்க புத்தகங்களைப்பாடமாக ஏற்படுத்தும்பொருட்டு இச்சங்கத்திலிருந்து அக்கழகத்திற்குச் சிலவுறுப்பினர்களைத் தெரிந்தனுப்பும் உரிமை கொடுக்க வேண்டுமென அரசியலாரை வேண்டியது.

சென்னைப்பல்கலைக்கழகச் செனட் சபைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தனுப்பும் உரிமை தரவேண்டுமென அரசியலாரை வேண்டியது.

உயர்தரக்கல்லூரிகளில் மாணவர்களை மேல்வகுப்புக்கு மாற்றும்போது மற்றைப்பாட மதிப்பெண்களோடு தாய் மொழிப்பாட மதிப்பெண்களையும் ஒருங்கு மதித்து மாற்றச் செய்யும்படி அதன் தலைவர்களையும் கல்வித்துறைத்தலைவரையும் வேண்டிக்கொண்டது.

பள்ளியிறுதிவகுப்புத் தேர்வில் தாய்மொழி வினாத்தாள் எண்களோடு மொழிபெயர்ப்பு எண்ணைச் சேர்க்காது, தாய்மொழியைத் தனிப்பாடமாகவே வைக்குமாறு அதன் பாடக்கழகத்தாரைக் கேட்டுக்கொண்டது.

14.8.35ல் அறிவுரைக்கொத்துக்கு ஆதரவாகக் கீழ்க் கண்ட முடிவுகள் நிறைவேறின:-

☯ சென்னைப்பல்கலைக்கழகத்தார் நடுத்தரத்தேர்விற்கு உரிய தமிழ்ப் பாடபுத்தகங்களுள் மறைமலையடிகளாரியற்றிய அறிவுரைக்கொத்து என்னும் உரைநூலையும் நியமித்தமையால் தமிழுலகின் நன்மதிப்பில் உயர்ந்தனர்.

☯ தமிழ்மொழியின் சிறப்பானது அயல்மொழிப்பற்றுடைய சிலரிழைத்து வரும்தீய முறைகளால் குலையாது பாதுகாக்கப்படும் பொருட்டு அடிகளார் எழுதிய தமிழிற் பிறமொழிக் கலப்பு தனித்தமிழ்மாட்சி என்னும் கட்டுரைகள் தமிழ் மாணவர் பயிலுதற்குரியன.

☯ கல்வியின் சிறந்த நோக்கங்களைக் கருதாது நம்மவர் பிழைப்புக்கெனக் கற்பது மதியுடைமையன்றெனவும், நம்மவர் ஒருமைப்பாட்டுடன் நாட்டு நலத்திற்குரிய தொண்டுகளைப் புரியாது நம்மில் பிளவுகளையுண்டாக்குவதும் பொதுநலம் பேணுதலையொழித்துத் தன்னலநாட்டங் கொள்ளுவதும் தேவ முன்னேற்றத்திற்கு ஏலாதனவெனவும் தமிழ்நாட்டவர் முன்னேற்றமடைதற்குரிய வழிதுறைகளை நடுநின்றாய்ந்து மறைமலையடிகளாரெழுதிய தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும் எனும் கட்டுரையும் மாணவர் பயிலவேண்டுதற்குரியது.


☯ இக்கூறியகட்டுரைகளடங்கிய அறிவுரைக்கொத்து எனும் நூலைச் சென்னைப்பல்கலைக்கழகத்தினர், மேதக்க தமிழ்ப்புலமை மிக்கோர் குழுமிய கல்விக்கழகத்தினராகிய குழுவினர் ஆய்ந்துதெளிந்த முடிபை, குறுகிய மனப்பான்மையுடைய ஒரு சிலர் செய்யும் கிளர்ச்சி காரணமாக மாற்றத் துணிவது அடாத செயலாகும்.

மேற்கண்ட தீர்மானங்கள் அனைத்தும் தமிழவேள் உமாமகேசுவரனார் தலைமையில் கரந்தைத் தமிழ் சங்கம் நிலைவேற்றிய - மொழி வளர்ச்சி குறித்த தீர்மானங்களாகும்.

"தங்கு புகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"



மாணிக்கம் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர் - 1போன் : 237953



# தமிழுக்கு ஓர் உமாமகேசுவரம்

'*தமிழுக்கும் அமுதென்று பேர்*' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அந்தத் தமிழ் அமுதின் தன்னேரில்லாத இன்சுவையைத் துய்த்துணர்ந்தவர்கள் சாகாநிலை பெற்றவர்கள் என்றார் பாரதியார். தமிழாய்ந்த தமிழறிஞர்கள், தமிழ்ப் பணி செய்த சான்றோர்கள் ஆகியோர் இதற்குத் தக்க சான்றாவர். இத்தகைய சான்றோருள் குறிப்பிடத்தக்க ஒருவர் தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்.

இவரது தன்னேரிலாத தமிழ்ப் புலமையும், தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் புரக்கும் புரவலர் பண்பினையும் தெள்ளிதின் உணர்ந்தோர் இவரைத் தமிழவேள் என்றும் '**செந்தமிழ்ப் புரவலர்**' என்றும் சிறப்புறப் பாராட்டி மகிழ்ந்தனர். முதன் முதலாகத் '**தமிழவேள்**' என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற தமிழ்ப் பெருந்தகை உமாமகேசுவரம் பிள்ளை அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

3.4.1973

டாக்டர். *கலைஞர் மு. கருணாநிதி,*

மாணிக்கம் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர். போன்: 237953